# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 244 ஆங்கீரச ஆடி 22 (06 . 08 1992) வியாழன்


★ புதையலுக்காக சிறுவர்கள்

## கடத்தல் வதந்தி பரப்புவோர்; கைது செய்ய பொலிஸார்!

புதையல் தேடும் ஒரு கும்பலினரால் தெற்கில் பாடசாலை சிறுவர்கள் கடத்தப்படுவதாக வதந்திகளை பரப்புவோர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் நேற்று அறிவித்தார். சிறுவர் கடத்தல் என்ற வதந்தி அரசுக்கு எதிரான திட்டமிட்ட பிரசாரம் எனவும் தொடர்ந்து இந்த வதந்திகளை பரப்புபவர்களுக்கு எதிராக அவசரகால சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் விடுத்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வதந்திகளை பரப்புவோரை கைது செய்ய பொலிஸார் சாதாரண உடையில் பாடசாலைகள் பஸ் நிலையங்கள் ரயில் நிலையங்கள் போன்ற பொது இடங்களில் நிறுத்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# தெரிவுக்குழு நடவடிக்கை முடிந்த பின்னர் தொண்டமான் யாழ். வருவாராம்

### நான்கு அம்சத்திட்டத்தை ஏற்கும்படி புலிகளை கோரவும் திட்டம்

"தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளின் முடிவுக்காகவே நான் காத்திருக்கிறேன், அவை முடிவுற்றதும் யாழ்ப்பாணம் சென்று நான்கு அம்ச திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி விடுதலைப் புலிகளைத் தூண்ட முயற்சிப்பேன், ஈழம் கனவை கைவிடும்படி விடுதலைப் புலிகளிடம் நான் கூறுவேன்"

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் சுற்றுலாத் துறை அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

தெரிவுக்குழுவின் உறுப்பினராக இருப்பதால் அதனது அமர்வுகளை முடிக்கும்வரை நான்கு அம்ச திட்டத்திற்கு ஆதரவுதேடப் போவதில்லை வடக்கு - கிழக்கு இணைப்பு உள்ளிட்ட இத்திட்டத்துக்கு சிங்களக் கட்சிகளின் பதில் என்ன என்பதை பார்க்கப் போவதாகவும் அவர் கூறினார்.

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எப்பொழுதும் இணைப்புக்கு ஆதரவாக இருந்துள்ளது ஐக்கியதேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் நிரந்தர இணைப்புக்கு எதிராகவுள்ள போதும் ஜனாதிபதி பிரேமதாசவும் அனுரா பண்டாரநாயகவும் சகல கட்சிகளும் கருத்தொருமித்த தீர்வுக்கு வரவேண்டும் எனக் கூறியுள்ளனர் அண்மைக்காலங்களில் இது ஒரு மிகச்சாதகமான முன்னேற்றம்"

"இரண்டு மாகாணங்களும் இப்பொழுது இணைக்கப்

—04 ஆம் பக்கம் பார்க்க

● மங்கள முனசிங்க

## அரச அதிபருடனோ பத்திரிகை ஆசிரியருடனோ பேசவில்லை

யாழ். அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகருடனோ அல்லது யாழ்ப்பாண பத்திரிகை ஒன்றின் ஆசிரியருடனோ தாம் எதுவித பேச்சும் நடத்தவில்லையென இனப்பிரச்சனைத் தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த இருவருடனும் திரு. மங்கள முனசிங்க பேச்சுவார்த்தை நடத்தியதாகச் சில செய்திகள் வெளியானதை மறுதலிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் தாம் நேரடிப் பேச்சுகள் எதையும் நடத்தப் போவதில்லை என்றும் எல்லாம் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமே நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

## ஒரு கிலோ சீனியில் 10ரூ. வரிகிடைக்கிறது

முன்னர் பணக்காரரிடம் இருந்து வரி அறவிடப்பட்டு ஏழைகள் பாதுகாக்கப்பட்டனர் ஆனால் இன்று ஏழைகளும் நடுத்தர மக்களும் வரி செலுத்த வேண்டியுள்ளது

இவ்வாறு ஐக்கிய சோஷலிச முன்னணி எம். பி. அதவுட செனிவிரட்ண பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினார்

மொத்த விற்பனை வரி மூலம் இவர்கள் பாதிக்கப்படுகின்றனர் ஒரு கிலோ சீனியில்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தபால்கள் விநியோகம்

கொழும்பிலிருந்து குமண கப்பலில் பருத்தித்துறைக்கு வந்த 462 தபால் பொதிகளில் 402 பொதிகள் நேற்று யாழ் பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டது.

யாழ் பிரதம தபாலகத்துக்குரிய தபால் பொதிகள் வழமை போல் தரம்பிரிக்கப்பட்டு இன்று முதல் விநியோகிக்கப்படுமென தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன

ஏனைய குடாநாட்டு தபாலகங்களுக்கான தபால் பொதிகள் வழமைபோல் அனுப்பி வைக்கப்படும்.

## ஸ்ரீலங்கா கடற்படை குறித்து இந். பாராளுமன்றில் பிரஸ்தாபம்

ஸ்ரீலங்கா கடற்படையினர் அண்மைக்காலத்தில் பிடித்துச் செல்லப்பட்ட இராமேஸ்வரத்தை சேர்ந்த 20 மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நேற்று இந்திய பாராளுமன்றத்தில் கோரிக்கை எழுப்பப்பட்டது

அனைத்துக்கட்சி உறுப்பினர்களும் இவ்விடயத்தை மத்திய அரசு விரைந்து கையாள வேண்டும் என கோரிக்கை விடுத்தனர் இந்திய மீனவர்கள் இலரை ஸ்ரீலங்கா படையினர் கைது செய்து சித்திரவதை செய்து கொன்று விடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது

1974இல் செய்து கொள்ளப்பட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா அரசு மீறுவதாகவும் இந்திய பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது

இதே பிரச்சினை ராஜ்ய சபாவிலும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களால் எழுப்பப்பட்டது

இப்படியான சம்பவங்கள் தொடராவிடாது ஒரு நிரந்தர தீர்வை காணுமாறு உறுப்பினர்கள் மத்திய அரசைக் கோரினர்.

● சபையில் அதாவுட

### தமிழ் மொழி அமுலாக்கலில் அதிகாரிகள் அக்கறையில்லை

அரசாங்கத்தின் மொழிக் கொள்கை சரியாக அமுல் செய்யப்படவில்லை.

இவ்வாறு ஐக்கிய சோசலிஷ முன்னணி எம்பியான அதாவுட செனிவிரத்ன சபையில் கூறினார்.

இந்தியாவில் அரச திணைக்களங்களில் ஆங்கிலத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது

இங்கே தமிழ் சிங்கள மொழிகளை அமுல் படுத்துவதில் அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை எனவும் அவர் சொன்னார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. பா மாணிக்கவாசகருடனோ அல்லது யாழ்ப்பாண பத்திரிகை ஒன்றின் ஆசிரியருடனோ தாம் எதுவித பேச்சும் நடத்த வில்லையென இனப்பிரச்சனைத் தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த இருவருடனும் திரு. மங்கள முனசிங்க பேச்சுவார்த்தை நடத்தியதாகச் சில செய்திகள் வெளியானதை மறுதலிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் தாம் நேரடிப் பேச்சுக்கள் எதையும் வைத்துக் கொள்ள மாட்டோம் என்றும் எல்லாம் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமே நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மொழிக் கொள்கை சரியாக அமுல் செய்யப்படவில்லை.

இவ்வாறு ஐக்கிய சோசலிஷ முன்னணி எம்பியான அதாவுட செனிவிரத்ன சபையில் கூறினார்.

இந்தியாவில் அரச திணைக்களங்களில் ஆங்கிலத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

இங்கே தமிழ் சிங்கள மொழிகளை அமுல் படுத்துவதில் அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை எனவும் அவர் சொன்னார்.

சபையிலும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களால் எழுப்பப்பட்டது.

இப்படியான சம்பவங்கள் தொடரவிடாது ஒரு நிரந்தர தீர்வை காணுமாறு உறுப்பினர்கள் மத்திய அரசைக் கோரினர்.

# நானாட்டானிலும் அதிரடி

# 4 படையினர் உயிரிழப்பு

**நேற்று அதிகாலை மீண்டும் விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் நான்கு படையினர் பலியாகினர்.**

நேற்று காலை 5.35 மணியளவில் மன்னார் நானாட்டான் முகாமிலிருந்து சுமார் 10 படையினர் 200 யார் தூரத்தில் உள்ள ஓர் பாடசாலைக்கு வந்துகொண்டிருந்தனர்.

இவர்கள் மீது புலிகள் நடத்திய 5 நிமிட தாக்குதலில் 4 படையினர் பலியாக ஏனையோர் முகாமிற்கு தப்பியோடிவிட்டனர். இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இத்தாக்குதலில் படையினரிடமிருந்து:

- ஏ.கே. எல்.எம் ஜி. - 01
- ரவைகள் - 330
- சேர்ச்சர் - 01
- றம் மகஸீன் - 01
- ரி - 81 துப்பாக்கிகள் - 02
- மகஸீன்கள் - 07
- ரி - 56 துப்பாக்கி - 01
- மகஸீன்கள் - 03
- உயர்வலு தொடர்பு சாதனம் - 01
- ஜே. ஆர். குண்டு - 01
- ஐ எம். ரவைகள் - 240
- ஏ கே. சேர்ச்சர்கள் - 02
- மற்றும் மழைக்கவசம், தண்ணீர் கான், 1 சோடி சப்பாத்து என்பனவும் கைப்பற்றப்பட்டது.

இத்தாக்குதலின் மூலம் கடந்த ஒரு வாரத்தில் 60 இற்கும் மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர்.

நீர்காத்து நிலம்காத்து வளிகாக்கும் போது
நீ கொண்ட உடலுக்கு ஆயுளும் நூறு

## இலங்கை கடற்பிராந்தியத்தில் இந்திய கப்பல்கள் ஊடுருவல்

இந்திய ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்கள் (றோலர்கள்) நெடுந்தீவு உள்ளிட்ட இலங்கைக் கடற்பிரதேசத்தில் ஊடுருவி பாரிய அளவில் மீன்பிடிப்பதில் ஈடுபடுவதாக அப்பகுதிக்கு விஜயம் செய்த சில மனித உரிமை இயக்கத்தினர் சண்டே டைம்ஸ் ஆங்கிலப்பத்திரிகைக்கு கூறியுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்களை உள்ளடக்கிய இவர்கள் மக்களின் மீன்பிடி உரிமைகளையும் சமூக - பொருளாதார நலன்களையும் பாதுகாப்பதே எமது நோக்கம் எனத் தெரிவித்தனர் எனவும் இப்பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

### ★ பேராசிரியர் ஷோல்க் தகவல்

## சிங்கள பௌத்தம் மட்டுமே என்றனர்

"நான் தமிழ் பௌத்தம் குறித்த போதனை பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய போது அங்கு கல்வி பயின்ற பிக்குமாரும் சிங்கள மாணவர்களும் என்னை ஒரு இனவாதி எனக்குறிப்பிட்டு எனது உரைக்கு ஆட்சேபனை தெரிவித்தனர்"

இவ்வாறு நேற்று யாழ் திருமறைக்கலாமன்றத்தில் தமிழ் பௌத்தம் குறித்து உரையாற்றிய சுவீடிஷ் பேராசிரியர் பீற்றர் ஷோல்க் தெரிவித்தார்.

நீங்கள் என்ன புதிதாக தமிழ் பௌத்தம் என்று ஒன்றை உருவாக்குகிறீர்கள் என்றும் சிங்கள பௌத்தம் மட்டும் தான் உள்ளது என்றும் அவர்கள் கூச்சலிட்டு தனது உரையை குழப்ப முயன்றதாகவும் பேராசிரியர் ஷோல்க் மேலும் தெரிவித்தார் (22)

உரிமையை சகலருக்கும் வழங்க நாம் நடவடிக்கையெடுக்கிறோம் என பொது நிருவாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பெரு

முறையாக அமுல் செய்தல் எதிர்காலத்தில் நாட்டில் பிரச்சினை எழ இடமேயில்லை எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

# இந்திய அதிகாரிகள் குழுவை இலங்கைக்கு அனுப்பப் பணிப்பு

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டுவருவதற்கு உதவுமாறு இந்திய அரசு இன்னமும் பூர்வாங்க வேண்டுகோளை இலங்கையிடம் விடுக்கவில்லையென கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் என். என். ஜா கடந்த செவ்வாயன்று சென்னை விமான நிலையத்தில் தெரிவித்தார்.

"பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டுவருவதற்கான ஒழுங்குகளைச் செய்யவும், நீதி சார்ந்த விடயங்களைக் கவனிப்பதற்கும் அதிகாரிகள் சார்ந்த குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பிவைக்குமாறு ராஜீவ் கொலை பற்றி விசாரணை நடத்தும் விசேட விசாரணைப் பிரிவை வெளிவிவகார அமைச்சு பணித்துள்ளது' எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

# உள்ளூராட்சிச் சபைகளிடமிருந்து மின்சாரசபை பொறுப்பேற்கும்

நாடுமுழுவதிலும் மின் விநியோகத் திட்டங்களை உள்ளூராட்சிச் சபைகளிடமிருந்து மின்சார சபை பொறுப்பேற்கவுள்ளது.

இதன்படி 187 உள்ளூராட்சிச் சபைகளின் மின் விநியோக வேலைகளை மின்சாரசபை பொறுப்பேற்கும்.

...ண்டி ஓடும் போட்டிக்கான இறுதி பெண் வட்டத்தில் ஐந்தாவது இடத்தினையடைந்தார். இறுதிப் போட்டியில்

ஞாயிற்றுக்கிழமை பதிப்பில் வெளியிடப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கைதான தாய்லாந்து யுவதிகளை உடன் நாடு கடத்த உத்தரவு

எய்ட்ஸ் நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ள தாய்லாந்து யுவதி ஒருவர் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் எய்ட்ஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பது மருத்துவப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவருடன் மேலும் மூன்று தாய்லாந்து யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நால்வரும் கல்கிசை மஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்கள் நால்வரையும் உடன் நாடு கடத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

# யுத்தத்தை நிறுத்தக்கோரி இயக்கம் நடத்த வலியுறுத்து

வடக்கு கிழக்கு யுத்தத்தை நிறுத்த அரசை வலியுறுத்தும் இயக்கம் ஒன்றை நாடளாவிய ரீதியிலும் சர்வதேச மட்டத்திலும் நடாத்த மக்கள் அமைப்புகள் அரசியல் கட்சிகள் ஆகியன நடவடிக்கை எடுக்க வேண்டுமென முற்போக்கு முஸ்லிம் முன்னணி கேட்டுள்ளது.

இம் முன்னணியின் தலைவரான முஹிர் ரஹ்மானின் பெயரில் இது தொடர்பான அறிக்கையொன்று கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது.

யுத்தம் மேலும் தொடர்ந்தால் மக்கள் பலியாவது நிச்சயம் என இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான இரு பெரும் உணவுக் களஞ்சியங்களில் இருந்து பெருந்தொகையான உணவுப் பொருட்கள் களவாடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் களஞ்சியங்கள் கந்தளாயிலும் நுவரெலியாவிலும் உள்ளன.

பலகோடி ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் பேரில் குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிகிறது.

களஞ்சியத்திற் கடமையாற்றும் இரண்டு அதிகாரிகளையும், முன்னாள் ஊழியர்களையும் பொலிஸார் விசாரணை செய்துவருகிறார்கள்.

# ஈராக்கின் வடபகுதியில் அமெரிக்கா குண்டு வீச்சு!

ஈராக்கின் வடக்கும் பகுதியில் உள்ள நிலவேஜ் பகுதியில் அமெரிக்கா குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்துவதாக ஈராக் குற்றம் சாட்டியுள்ளது.

ஈராக் தனது இந்தக் குற்றச்சாட்டை எழுத்து மூலமாக ஐ. நா. பொதுச் செயலாளரிடம் சமர்ப்பித்துள்ளது.

இதனிடையே ஈராக்கின் அணு ஆயுதங்களை பரிசீலனையிட ஈராக் வரும் ஐ. நா. நிபுணர் குழு முதலில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதை கற்றுக் கொள்ள வேண்டுமென ஈராக் சபாநாயகர் கூறியுள்ளார்.


## சிறு விளம்பரம்

**ஜோதிடன்**

"அன்புஜீ" என்ற பெயரில் இயங்கிய அனைத்தும் Sandilipay (A. G. A) இலிருந்து Jaffna Fort, J/81 இல் செயல்படும் "யாழ்) சிரி அன்புஜீ" ஆக 18 மணி நேரம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இயங்குகிறது 08005

(3) மயக்கம் - இல்லாத ஒன்றை உள்ளதாக மயங்குவது.

ஈ) மூன்று குற்றங்கள் :- காமம், வெகுளி, மயக்கம்.
(1) காமம் - ஆசைவயப்படல்
(2) வெகுளி - ஆசைப்பட்டது கிடைக்காவிடத்து உண்டாகும் சினம்.
(3) மயக்கம் - நிலலாதவற்றை நிலையின என மயங்கல்.

உ) மூன்று பிறப்புகள் - உம்மை, இம்மை, மறுமை.
(1) உம்மை - சென்ற பிறப்பு
(2) இம்மை இப்பிறப்பு
(3) அம்மை - மறுபிறப்பு

ஊ) மூன்று பற்றுக்கள் :- (முப்பற்று) அகப்பற்று, புறப்பற்று, அகப்புறப்பற்று
(1) அகப்பற்று - நான் என்று தன்னிலே கொள்ளும் பற்று
(2) புறப்பற்று - எனது என்று பிறவற்றிலே கொள்ளும் பற்று
(3) அகப்புறப்பற்று - தன்னிலும் பிறவற்றிலும் கொள்ளும் பற்று.

எ) மூன்று மனங்கள் :(மும்மனம்) சித்தம், புத்தி, அகங்காரம்.
(1) சித்தம் - சிந்தித்தல்
(2) புத்தி - நிச்சயித்தல்
(3) அகங்காரம் - கொண்டெழுப்புதல் (செயற்படுதல்)

மூன்றாந் திருவிழா இவ்வாறான மும்மைகளை நீக்குவதற்கு அமைந்த விழாவாகும்.

இது மூச்குணங்களை எழுப்புதற்கானது என்றும் கூறுவர்.

(ஆதாரம்:- சைவசமய சிந்தாமணி)

ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை விரிவான அடிப்படையில் நடத்தி வருகிறது.

இப்போட்டிகளின் ஓர் அங்கமாக நடைபெற்று வந்த உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று திருநகர் விளையாட்டு மைதானத்தில் பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் திருநகர் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திலகம் இளைவரசர் விளையாட்டுக் கழக அணி மோதும். (16)

சபை கிருடபத்தின் பேரிலே தான் அகதிகள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுவார்கள் என டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி ராஜ்யசபாவில் எழுப்பிய பிரச்சினைக்கு உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் பதிலளித்தார்.

ஆனால் நிலைமை அவ்வாறில்லை மண்டபம் முகாமில் உள்ள அகதிகளுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டதாக இந்தியாவின் முன்னணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியே குற்றம் சாட்டியுள்ளார்.

# இன்றைய தெய்வீக இசையரங்கு

## சிறிமுருகன் தண்ணீர்ப் பந்தல்

மாலை - 6.00 - 8.00 வரை

| பாட்டு | வயலின் | மிருதங்கம் |
|---|---|---|
| சாரதா சச்சிதானந்தம் | சாந்தநாயகி சுப்பிரமணியம் | எம். சிதம்பரநாதன் |

என்று இவர் கூறியுள்ளார். அப்படியானால் இங்கே என்ன நடக்கிறது, எங்கு போர் நடக்கிறது என இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கு தெரியாது என எடுப்பதா அல்லது வேண்டுமென்றே இப்படி அப்பட்டமான பொய் கூறுகின்றார் என்று கொள்வதா என அதிசயிக்க வேண்டியுள்ளது.

சென்றமுறை திருகோணமலைக்கு அகதிகள் வந்து சேர்வதற்கு முதல் நாள் நடந்த தாக்குதலில் இருந்து இன்று வரை எத்தனை தாக்குதல்கள், மோதல்கள் திருகோணமலையில் நடந்துள்ளன, மன்னாரில் எத்தனை மோதல்கள் இடம்பெற்றன. இப்படியிருக்க இவை போர் நடக்காத பகுதி என எப்படி துணிந்து இவர் கூற முடியும்.

இந்த வாரம் சுவிஸ் நாட்டு தூதுவரும் பிரிட்டிஷ் தூதராலய அதிகாரியும் அகதிகளின் நிலைமையை அறிய மன்னார் செல்கின்றனர்.

அகதிகள் பலவந்தமாகத் திருப்பியனுப்பப்படக்கூடாதென ஐ.நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் உறுதி செய்ய வேண்டும் என இருக்க

என்பதே இந்தியாவின் வெளியிடப்படாத உள்நோக்கம் என்பதை சர்வதேச உலகம் புரிந்து கொள்ள வேண்டும்.

புத்தரும் காந்தியும் பிறந்த நாடு இந்தியா, புனிதமான நாடு அது என்று உலகம் தொடர்ந்தும் நம்பிக் கொண்டிருக்க முடியாது.

அரசியலுக்காக, அதிகாரத்துக்காக அநியாயத்தையும் செய்யத் தயாராக இருக்கும் ஒரு நாடாகவே இந்தியா மாறியுள்ளது என்பதை சர்வதேச உலகம் கவனிக்க வேண்டும்.

பெரிய நாடு என்பதற்காக அந்நாடு செய்யும் அநீதிகளை சர்வதேச சமூகமும், மனித உரிமைகள் அமைப்புகளும், சர்வதேச நிறுவனங்களும் ஏற்றுக் கொள்ளவோ ஜீரணிக்கவோ கூடாது.

மனித உரிமைகளை மதிக்கும் மேற்குலகம் இந்த அநியாயத்தை கவனத்தில் எடுக்கும் என நம்ப இன்னும் இடமிருக்கிறது என்று தோன்றுகிறது.

## பார்ஸிலோனா ஒலிம்பிக் - 92
## பதக்க விவரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சி. ஐ. எஸ் முன்னாள் சோவியத் குடியரசுகள் | 33 | 28 | 20 |
| அமெரிக்கா | 20 | 26 | 22 |
| ஜேர்மனி | 17 | 14 | 23 |
| சீனா | 16 | 20 | 14 |
| ஹங்கேரி | 10 | 07 | 02 |
| அவுஸ்திரேலியா | 06 | 08 | 09 |
| தென் கொரியா | 09 | 03 | 10 |
| ஸ்பெயின் | 10 | 01 | — |
| போலாந்து | 03 | 04 | 06 |
| ஜப்பான் | 03 | 07 | 07 |
| கனடா | 06 | 01 | 06 |
| பிரான்ஸ் | 07 | 05 | 12 |
| இத்தாலி | 05 | 05 | 08 |
| பிரிட்டன் | 04 | 03 | 06 |
| கியூபா | 04 | 02 | 07 |
| துருக்கி | 02 | 01 | 01 |
| பல்கேரியா | 01 | 04 | 01 |
| ருமேனியா | 04 | 05 | 07 |
| செக்கோஸ்லேவேக்கியா | 02 | 02 | 01 |
| இந்தோனேஷியா | 0[illegible] | — | — |
| நோர்வே | 02 | 02 | — |
| எஸ்தோனியா குடியரசு | 01 | — | 01 |
| கிரேக்கம் | 01 | — | — |
| சுவீடன் | — | 03 | 03 |
| நியூசிலாந்து | 01 | 03 | 03 |
| நெதர்லாந்து | — | 02 | 06 |
| இஸ்ரேல் | — | 01 | 01 |
| பெரு | — | 01 | — |
| லத்வியா குடியரசு | — | 01 | 01 |
| சுயேட்சை (யூகோ) | — | 01 | 02 |
| பெல்ஜியம் | — | 01 | 02 |
| பின்லாந்து | — | — | 01 |
| மொங்கோலியா | — | — | 01 |
| சூரினாம் | — | — | 01 |
| பிரேசில் | 01 | 01 | — |
| ஜமெய்கா | — | — | 01 |
| நமீபியா | — | — | 01 |
| அவுஸ்திரியா | — | — | 01 |
| வட கொரியா | 01 | — | 20 |
| டென்மார்க் | — | — | 02 |
| சுலோவேனியா குடியரசுகள் ... | | — | 02 |

# ஆண்களுக்கான குதிரை சாகஸம்
# 3 பதக்கங்களும் ஜேர்மனிக்கு

ஒலிம்பிக்போட்டியில் நேற்று ஆண்களுக்கான தனி நபர் குதிரை சாகஸப்போட்டியில் ஜேர்மனி தங்கம், வெள்ளி, வெண்கல பதக்கங்களை பெற்று சாதனை படைத்தது.

மகளிர் இரட்டையர் ரேபிள் டெனிஸ் போட்டியில் சீனா தங்கப்பதக்கத்தை பெற்றது.

பெண்களுக்கான ஓட்டப் போட்டியில் பங்கு பற்றிய சி. ஐ எஸ் வீராங்கனை ஒருவர் போதை மருந்து அருந்தியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் தாமாகவே போட்டியிலிருந்து விலகி தாயகம் திரும்பி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கம் பதக்கம் பெற்றதன் மூலம் உலகின் அதிவேக ஓட்ட வீராங்கனையான அமெரிக்காவின் செய்ல் டெவர்ஸ் மீதும் போதை மருந்து பாவனை வதந்திகள் எழுந்துள்ளன.

எனினும் அவர் இந்த வதந்திகளை வன்மையாக மறுத்துள்ளார்.

ஆண்களுக்கான ஹொக்கி போட்டியில் அரையிறுதிப் போட்டிகள் நேற்று நடைபெற இருந்தன. இதில் ஏ பிரிவில் அவுஸ்திரேலியாவும் நெதர்லாந்தும் மோதின.

இதில் அவுஸ்திரேலியா நெதர்லாந்தை 3:2 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது. அவுஸ்திரேலியா பி பிரிவில் வெற்றி பெறுபவருடன் இறுதிப்போட்டியில் விளையாடும்

'பி' பிரிவில் பாகிஸ்தானும் ஜேர்மனியும் நேற்று மோத விருந்தன.

இதே சமயம் நேற்று நடைபெற்ற முக்கியத்துவமற்ற ஓர் போட்டியில் ஏற்கனவே தகுதியை இழந்து விட்ட இந்தியா ஸ்பெயினிடம் தோல்வி கண்டது.

## ● ஹலஉறுமயவுக்கு எச்சரிக்கை
## நடவடிக்கைகளை நிறுத்தவும் இல்லையெனின் தடைசெய்யப்படும்

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இயங்கும் அழுத்தக் குழுவான ஹெலஉறுமய தலைவர்களை அழைத்து கட்சிக்குபாதகமான நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கோருவார். அவர்கள் அதற்கு இணங்காவிட்டால் ஹெலஉறுமயதடை செய்யப்பட்டு அதன் உறுப்பினர்களுக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு ஹெலஉறுமய சர்ச்சை தொடர்பாக கருத்துத் தெரிவித்தசுதந்திரக்கட்சி வட்டாரங்கள் கூறின.

ஹெலஉறுமயவின் நிலைப்பாடு சுதந்திர கட்சியின் நிலைப்பாடு எனத் தவறாக கருதப்படலாம் எனவும், இவற்றினால் சுதந்திரக்கட்சி ஒரு சிங்கள பௌத்த இனவாதக் கட்சியாக முத்திரையிடப்படலாம் எனவும் திருமதி பண்டாரநாயக்க அஞ்சுவதாக தெரிவிக்கப்படுகிறது

இதற்கிடையில் ஹெல உறுமயவின் நடவடிக்கைகள் கட்சிக்கும் கட்சித் தலைமைக்கும் பாதகமானதாகவுள்ளதெனவும் இதுவரை நிகழ்ந்த பாதகங்களின் தாக்கங்களை குறைக்க திருமதி பண்டாரநாயக்க நடவடிக்கை எடுப்பார் எனவும் சுதந்திரக்கட்சி செயலாளர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

## ● எஸ். எல்: குணசேகர கூறுகிறார்
## ஹெலஉறுமய இனவாதகுழுவல்ல அதைக் கலைக்கமுடியாது

"ஹெலஉறுமயவை இன ... முஸ்லிம்கள் ஆகியோர் நாட்

## தீவக கிராமசேகவர்கள் செயலகத்தில் பணிபுரிவர்

தீவகப் பகுதியின் சகல கிராமசேவகர்களும் வாரத்தில் மூன்று தினங்கள் யாழ் செயலகத்திலுள்ள வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் காரியாலயத்தில் பணியாற்றவுள்ளனர்.

வாரத்தில் திங்கள், புதன் வெள்ளி தினங்களில் தீவக மக்கள் தத்தம் பகுதி கிராம சேவையாளர்களை யாழ் செயலகத்தில் சந்திக்க முடியும் என யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

## ● கந்தளம ஹோட்டல் நிர்மாணம்
## நீதிமன்றம் தடையுத்தரவு வேலைகள் தொடரும்

கந்தளம ஹோட்டல் திட்டத்துக்கு ஐம்பது ஏக்கர் காணியை காணி ஆணையாளர் ஐம்பதுவருடத்துக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம்கடந்த வாரம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது

எவ்வறயின் மென்ரல்யவுண்டேஷன் என்னும் சூழல்பாதுகாப்பு நிறுவனம் தாக்கல் செய்த முறையீட்டின் மீதே மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது

உரியகுத்தகை முறி எழுதப்படாமல் உத்தேச குத்தகைக்காரரிடம் அரச காணியை பாரம்கொடுக்க காணி ஆணையாளருக்கு அதிகாரமில்லை எனவும் நீதிமன்றம் கூறியுள்ளது.

இந்த ஹோட்டல் நிர்மாணத்தைமேற்கொண்டுவரும் அயிற்கென்ஸ்பென்ஸ ஹோட்டல் லிமிட்டட் கம்பனி இந்தவிடயத்தை கம்பனியின் பொதுக் கூட்டத்தின் பரிசீலனைக்கு விடவுள்ளது

இதற்கிடையில் என்னநடந்தாலும் ஹோட்டல் நிர்மாணப்பணிகள் தொடரும் என்றும் அதற்கான சகல உதவிகளும் வழங்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்

## சபையில் சுதந்திரக் கட்சி எம், பி
## உலக வங்கியின் சொற்படி அரசு நடந்துகொள்கிறது

இந்த அரசாங்கம் உலக வங்கியின் சொற்படி ஆடுகிறது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பியான தர்மஸ்ரீ சேனநாயக்கா பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினார்

விரைவில் பெற்றோல் டீசல் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக நாம் அறிகிறோம் அதுவும் உலக வங்கியின் சொற்படியே நடைமுறைப்படவுள்ளது

சரியான பொருளாதாரக் கொள்கையின்றி அரசு தத்தளிக்கிறது எனவும் அவர் சொன்னார்

## பொது எதிர்க்கட்சி முன்னணியை உருவாக்க முயற்சி

கொழும்பிலிருந்து இரத்தினபுரிவரை இடம்பெறவுள்ள மனிதச்சங்கிலி போராட்டம் தொடர்பாக கூட்டு எதிரணிக்கட்சிகளின் கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் பழம்பெரும் பிரமுகர் கே. பி சில்வா கண்டனம் தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது

இவ்வாறு அவருக்கும் இவற்றின் ஏற்பாட்டாளர் மகிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் கருத்து வாக்குவாதம் இடம்பெற்றதாக தெரிகிறது

ஒரு பொது எதிர்க்கட்சிகளின் முன்னணியை உருவாக்குவது பற்றியும் எதிர்க்கட்சி தலைவர்கள் இக்கூட்டத்தில் விவாதித்தனர்.

தோமஸ் ஏப்ரஹாம் லங்கா கார்டியன் சஞ்சிகையில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது

## புலிகளுடன் பேசுவதைத் தவிர பிரேமதாசவுக்கு வேறுவழியில்லை

இனப்பிரச்சினைத் தீர்வைமொட்டு செய்யப்படும் யுத்த நிறுத்தத்திற்கோ, அல்லது பேச்சுவார்த்தைக்கோ ஆயுதங்களை கைவளிக்கவேண்டும் என்ற முன்நிபந்தனைகள் இருக்கப்படாது என விடுதலைப்புலிகள் வலியுறுத்தியுள்ளனர் பிரேமதாசவும் பிரபாகரனும் யுத்தத்தை நிறுத்திபேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டிய தேவை உள்ளது தற்போதுள்ள இராணுவ சமநிலையை அப்படியே நிலைநிறுத்தி யாழ்ப்பாணத்தைத் தொடர்ந்தும் தனது பிடியில் வைத்திருப்பதற்கு விடுதலைப்புலிகள் அரசிடம் இருந்து பேச்சுவார்த்தைக்கான அழைப்பை எதிர்பார்க்கிறார்கள்

இதைப் பிரேமதாசா செய்யக்கூடிய நிலையில் இல்லை ஏனெனில் அப்படிச் செய்யின் எதிர்க்கட்சியில் இருந்து எதிர்ப்

ஏனெனில் அப்படிச் செய்யின் எதிர்க்கட்சியில் இருந்து எதிர்ப்புக்கிளம்பும் ஆனால், இராணுவ நடவடிக்கை எதுவித முன்னேற்றமும் அடையாத நிலையில் அரசியல் செயற்பாடு இதப்பிதம் அடைந்து. காலமும் பணமும் விரயமாகிவருகிற இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பிரேமதாஸவுக்குப் புலிகளுடன் பேசுவதைத் தவிர வேறு வழியில்லை அடுத்த சில மாதங்களுக்கிடையில் சமாதானத்துக்கு முன்னோடியாக வெளிப்படையாகவோ அன்றி இரகசியமாகவோ அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு

# அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை ஒருவருடப்பூர்த்தி பேரணி ஏற்பாடு

ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராக அரசியல் குற்றச்சாட்டு கொண்டுவரப்பட்ட ஒரு வருடப் பூர்த்தியை நினைவுபடுத்து முகமாக மாபெரும் பேரணியொன்றை நடத்த கூட்டு எதிரணிக் கட்சிகள் முடிவு செய்துள்ளன இப்பேரணி ஆகஸ்ட் இருபதாம் திகதிநடைபெறும்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இப்பேரணிக்கான ஏற்பாட்டுக் கூட்டம் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகவின் தலைமையில் இடம்பெற்றது

1953 ஆகஸ்ட் ஹர்த்தாலை நினைவு படுத்தும் வகையில் சகல எதிர்க்கட்சிகளும் பங்கு பற்றும் கூட்டம் ஒன்றை கிரிலப்பனையில நடத்துவது பற்றியும் இக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது,

“ஹெலஉறுமயவை இனவாதக்குழு எனக்கூறமுடியாது அதை குலைத்துவிட வேண்டிய காரணம் எதுவும் இல்லை என்னைப்பொறுத்தவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் அதற்கு உடன்படமாட்டேன்”

இவ்வாறு ஹெலஉறுமயவின் முக்கியசித்தாந்தவாதியும் சட்டத்தரணியும், பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். எல். குணசேகர தெரிவித்துள்ளார்

சிங்களவர்கள், தமிழர்கள் முஸ்லிம்கள் ஆகியோர் நாட்டின் எந்தப்பகுதியிலும் சம உரிமைகளுடன் வாழ்வதற்கான உரிமைகொண்டவர்களாக இருக்க வேண்டும்

ஆகையினாலே வடக்கு-கிழக்கை தமிழர்களின் பாரம்பரிய தாயகமென்றோ, வேறெந்தப் பகுதியையும் வேறெவரது பாரம்பரிய தாயகம் என்றோ அங்கீகரிப்பதை ஹெலஉறுமய எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்

## ★ ஹெலஉறுமய மீது
# அவசரப்பட்டு நடவடிக்கை வேண்டாம் என்கிறார் அனுரா

எந்தவிதமான நடவடிக்கை எடுத்தாலும் அது கட்சிக்குள் மேலும் பிளவுகளை உண்டு பண்ணக்கூடுமெனவே ஹெல உறுமயவை தடைசெய்யவோ உறுப்பினர்களுக்கெதிராக எந்தவித ஒழுங்கு நடவடிக்கையோ எடுக்கப்படக்கூடாது

இவ்வாறு ஹெலஉறுமயக்குழுவை தடைசெய்ய ஆலோசிப்பது பற்றி கருத்துத் தெரிவிக்கையில் திரு அனுரா பண்டாரநாயக கூறினார்.

எனினும் ஹெலஉறுமய உறுப்பினர்களுடன் கட்சித்தலைமை பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதை அவர் வரவேற்றார்

சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருபது பேர் ஹெலஉறுமயவில் இருக்கின்றனர் அவர்கள் சுதந்திரக் கட்சியின் முக்கிய அங்கம். அவர்களுக்கெதிரான எந்த அவசர நடவடிக்கையும் சுதந்திரக்கட்சியின் எதிர்காலத்தை பாதிக்கும் எனவும் அவர் கூறினார்

கிறது

ஜூலை முதலாம் திகதி நடைபெற்ற ‘ஜனகோஷம்’ போராட்டம் வெற்றியளிக்கவில்லையெனவும் திரு. சிகவச கூறினாராம்

---

## தெரிவுக்குழு...

பட்டே உள்ளன எனினும் இது தற்காலிக இணைப்பு எனக் கூறப்படுகிறது” என்றும் கூறினார்.

“மருந்துக் குளிகை கசப்பாக இருந்தால் இனிப்பூட்டப்படுகிறது அதைமக்களின் தொண்டைக்குள் திணிக்க முடியாது படிப்படியாகவே அவை கொடுக்கப்பட வேண்டும் அதேபோன தற்காலிக இணைப்பையும் நிரந்தரமாக்கலாம்” எனவும் திரு. தொண்டமான் கூறினார்

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் இரகசிய பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி தமக்கு தெரியாது எனக்கூறிய திரு தொண்டமான் “விடுதலைப்புலிகளுடன் எந்தப் பேச்சு வார்த்தையிலும் நான் பங்குபற்றவில்லை ஆனால் சமாதானம் வேண்டுமெனில் எந்த நேரமும் நல்ல நேரம் தான்” என்றும் கூறினார்.

விவாதித்தனர்.

## திடீர் தேர்தல்

அரசாங்கம் திடீர்தேர்தல் ஒன்றை நடத்த அழைப்பு விடுக்கக்கூடுமெனவும் அதற்கு ஆயத்தமின்றியிருக்கக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டது,

இப்படியொரு முன்னணியை ஏற்படுத்துவதை எதிர்க்கும் சுதந்திரக்கட்சியின் ஒரு பகுதியினர் முன்னணியொன்று ஏற்படுத்தப் பட்டால் அதன் தலைவரும் செயலாளரும் சுதந்திரக்கட்சியினராகவே இருக்க வேண்டும் என வற்புறுத்துகின்றனர்

---

## 1 கிலோ...

10ரூபா வரியாக அறவிடப்படுகிறது

குழந்தைகளின் பால் மாவிலும் வரி அதிகரித்துள்ளது இதனால் ஏழைக் குழந்தைகள் போஷாக்கின்றி வாடுகின்றனர்

வாழ்க்கைச் செலவு என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது இது ஏழைகளையே பாதிக்கிறது எனவும் அவர் சொன்னார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கலவியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 06 08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது